<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண்.6/2015</u>
<u>நாள்.22.11.2023</u>

2023ம் ஆண்டு நவம்பர் 22 ஆம் தேதி சரவணன் என்பவரின் வாக்குமூலம் (1989-ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு. R. பிரகாஷ், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = சரவணன் | தகப்பனார் பெயர்= சுப்பிரமணியன் |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = 47 |

==============================================================

**<u>PW 1 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

04.01.2001 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.1, 20.03.2001 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.2, 07.01.2005 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.3, 08.04.2006 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.4, 13.02.2008 தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.5,

22.03.2013 தேதியில் இறந்துபோன எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6, எனது பெயரில் உள்ள சாகுபடி அடங்கல் உண்மை நகல் வா.சா.ஆ.7, எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8, 03.02.2010 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9, 10.11.2014 தேதியிட்ட வாழை விற்பனை செய்த ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வா.சா.ஆ.1 – வா.சா.ஆ.5 மற்றும் 7, 10 ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)